Registered as a Newspaper

சகல மின்சாரஉபகரணங்கள்
மின் மோட்டர்கள்
குளிர்சாதனப் பெட்டிகள்
S. Lon பைப் - Fitting
Jaffna Electricals
94 (6) Stanley Road,
JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

யாழ்நகரில்
முன்னணி
மின்சார
ஒப்பந்தக்காரர்களும்
விநியோகஸ்தர்களும்
JAFFNA ELECTRICALS
94 (6) Stanley Road,
JAFFNA.

சுடர் 2: யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு புரட்டாதி மீ 02 உ. வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹர்ரம் பிறை 23 (18 - 09 - 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 253

# திலீபனின் நிலை மோசமாகிறது

# இந்தியத் தரப்பில் அசைவில்லை

## இரண்டு இராணுவ அதிகாரிகள் வந்து பார்த்து விட்டுச் சென்றனர்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 18

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மூன்று நாட்களாக நீராகாரமும் இன்றி உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. திலீபனின் உடல்நிலை மோசமடைந்து வருவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் உண்ணாவிரதத்தை முடிக்கும் விதத்தில் (நேற்று இரவு இச் செய்தி எழுதப்படும்வரை) இந்தியத் தரப்பு அசையவில்லை. அதில் அக்கறை காட்டவில்லை. தமிழகம் சென்ற புலிகளின் பிரதிநிதிகள் மூலமும் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இந்திய இராணுவத்தைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் திரு. திலீபனை வந்து பார்த்துச் சென்றார்கள் அவ்வளவு தான்! இராணுவப் பொறுப்பதிகாரி திரு. ஹர்கீரத்சிங் திலீடனைப் பார்க்கவென்று வந்தபோதிலும், மழை காரணமாக அவ்வாறு செய்ய முடியவில்லை; திரும்பிவிட்டார்.

திரு திலீபன் கடந்த மூன்று நாட்களாக உண்ணாவிரதம் இருக்கின்றார். அவர் கடந்த செவ்வாய்க் கிழமை காலை 9.55 மணிக்குத் தமது உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். நேற்றிரவு 9 மணி அளவில் அவர் பரிசோதிக்கப்பட்டார். நாடித் துடிப்புக் குறைவாக இருந்தது. உடல்நிலைமை மோசமடைந்து வருவதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். மேலும் சில மணிநேரம் சென்றால், வைத்திய சிகிச்சை செய்தும் பயன் எதுவும் காணமுடியாமற்போகும் என்றும் வைத்தியர்கள் தெரிவித்தனர் எனினும் திலீபனின் விருப்பப்படி சிகிச்சை எதுவும் அளிக்கப்படவில்லை.

தமிழ் மக்களின் நலன்களைப் பாதிக்கும் விடயங்களை உள்ளடக்கிய ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு [4-ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்தேவி தடுக்கப்பட்டது

நேற்றுக் காலை யாழ் ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட இருந்த யாழ் தேவி பொது மக்கள் நடத்திய மறியலால் தடுத்து நிறுத்தப்பட்டது

அதே சமயம் சரக்கு ரயில் ஒன்றும் ராசாவின் தோட்டம் வீதிக் கடவைக்கு அப்பால் செல்ல முடியாதவாறு பொது மக்களால் தடுக்கப்பட்டது. (இ-51)

## மந்திகை முகாம் மூடப்பட்டது

பருத்தித்துறை.செப் 18

மந்திகையில் முகாமிட்டிருந்த இந்திய அமைதி காக்கும் படையினர் தமது முகாமை மூடி உள்ளனர்.

புலோலி மெ.மி.த.க (4-ஆம் பக்கம் பார்க்க)

## லலித்தும் மரம்நாட்டினார்

கொழும்பு, செப். 18

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் மரம் ஒன்றை நாட்டினார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் பிறந்த நாளை ஒட்டியே இந்த மரம் நடும் வைபவம் இடம் பெற்றது

ஜனாதிபதி ஜெயவர்த்தனா நீண்டகாலம் வாழ வேண்டும் என்று கூறியவாறு அமைச்சர் மரத்தை நட்டார்

## புலிகளையும் மக்களையும் அந்நியப்படுத்த முயற்சி

### இனங்காண வேண்டுகோள்

யாழ்ப்பணம், செப் 18

தமிழீழத்தில் இன்று நிலவுகின்ற சில சாதக மற்ற நிலைமைகளைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை மக்களிடமிருந்து அந்நியப்படுத்தும் நடவடிக்கைகளை சில தீய சக்திகள் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது. நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவ்வாறு (4ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆருக்கு ராஜீவ் வாழ்த்து

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பிறந்த தின வாழ்த்துச் செய்தி அனுப்பினார்.

நாட்டின் சமாதானத்துக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் தொடர்ந்து பாடுபடவேண்டும்- இப்படி பிரதமர் காந்தி, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை வாழ்த்தினார். (அ-எ)

## 5 வெளிநாடுகளின் தூதரக அதிகாரிகள் திலீபனைப் பார்த்தனர்

யாழ்ப்பாணம், செப். 18

மூன்றாவது நாளாக சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் திரு. திலீபனை ஐந்து வெளி நாட்டுத் தூதரக உயர் அதிகாரிகள் நேற்றுப் பார்வையிட்டுக் கவலை தெரிவித்தனர்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சுவீடன், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, லண்டன், ஜப்பான் நாட்டுத் தூதரக உயரதிகாரிகள் யாழ் அரச அதிபருடன் மாநாடு ஒன்றையும் நடத்தினர். அதன் பின்னர் யாழ் நகரில் சேதமடைந்த பகுதிகளையும் யாழ். ஆஸ்பத்திரியையும் பார்வையிட்டனர்.

### பல்கலைக்கழகமும் சென்றனர்

அதனையடுத்து யாழ். பல்கலைக்கழகத்திற்கும் அவர்கள் விஜயம் செய்தனர்,

இன்று வடமராட்சிப் பகுதிக்கு அவர்கள் விஜயம் செய்யவுள்ளனர். (ஒ-10)

## போராட்டத்துக்கு ஈழவர்முன்னணி முழு ஆதரவு

யாழ்ப்பாணம், செப்.18

ஐந்து அம்சக் கோரிக்கை தொடர்பாக தற்பொழுது நடைபெறும் போராட்டத்துக்கு ஈழவர் முன்னணி பூரண ஆதரவு தெரிவித்துள்ளது

இது தொடர்பாக ஈழவர் முன்னணி விடுத்த அறிக்கை வருமாறு:

தமிழ் பேசும் மக்களின் நலன்களை முன்வைத்து ஐந்து அம்சக் கோரிக்கை அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திலீபன் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளதோடு பொதுமக்கள் மறியல், வழிமறிப்புப் போராட்டங்களையும் (4 ஆம் பக்கம் பார்க்க)

# உணர்ச்சிபூர்வமாகக் கழிந்த மூன்றும் நாள் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப். 18

திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் திலீபன் காணப்பட்டார்.

உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று குடாநாட்டின் சகல பாகங்களில் இருந்தும் ஏராளமான மக்கள் ஊர்வலமாக நல்லூரை நோக்கி வந்தனர்.

நேற்றுப் பெய்த மழையையும் பொருட்படுத்தாது பல மக்கள் கியூ வரிசையில் திலீபனைப் பார்த்துச் சென்றனர். எங்கும் சோகமயமாகக் காணப்பட்டது

இளம் பெண்கள் கூட கண் கலங்கி அழுதபடி நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது. (இ-10)

## பாலகுமார் திலீபனை பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், செப். 18

ஈரோஸ்பிரமுகர் திரு பாலகுமார் நேற்றிரவு மூன்றாவது நாளாக உண்ணாவிரதம் இருக்கும் திலீபனைப்பார்வையிட்டார்.

மதியம் ஈரோஸின் வடமாகாண அமைப்பாளர் பரா மாஸ்டரும் வந்து பார்த்துச் சென்றார். [ஒ-10]




என்னெண்டாலும் குரு பக்தி விட்டுப் போறது கஷ்டந்தான்! அப்ப அவர் பெரியவர் பக்கம் தானே.....?

## பொலீஸார் சுட்டு தமிழ்நாட்டில் 10 பேர் பலி!

சென்னை, செப். 18

தமிழ்நாட்டில் வன்னியர் சங்கம் நடத்திய சாலை மறிப்புப் போராட்டத்தின்போது ஏற்பட்ட மோதலைத் தடுக்கப் பொலீஸார் சுட்டதில் 10 பேர் உயிரிழந்தனர்.

சுமார் ஐயாயிரம் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

மாநில மட்டத்தில் 20 சத வீத வேலைவாய்ப்பும் மத்திய மட்டத்தில் 2சத வீத வேலைவாய்ப்பும் கோரி வன்னியர் சங்கம் இந்தச் சாலை மறிப்புப் போராட்டத்தை நேற்று நடத்தியது இப்போராட்டத்தின்போது 3 பாலங்கள், 43 பஸ், லொறிகள் சேதமாக்கப் [4 ஆம் பக்கம் பார்க்க]

## உடுப்பிட்டி புளொட் முன்னாள் பொறுப்பாளர் கடத்தப்பட்டார்

வல்வெட்டித்துறை, செப். 18

உடுப்பிட்டி பகுதி முன்னாள் புளொட் பொறுப்பாளர் திரு. மாணிக்கம் துரைராஜா (31வயது) முகமூடி இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

இச்சம்பவம் செவ்வாய் இரவு வல்வெட்டி, வேலியன் தோட்டத்தில் அவரது வீட்டில் வைத்து இடம் பெற்றது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது.

சம்பவ தினம் துரைராஜா வீட்டில் பெற்றுருடன் ரி வி. பார்த்துக் கொண்டிருந்தார். இரவு 10 மணி இருக்கும்.

சப்போது மினி பஸ்ஸில் வந்த இனம் தெரியாத முகமூடி அணிந்த சுமார் பத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் அவரது வீட்டைச் சுற்றி ஆயுதபாணிகளாக நிற்க மூவர் அவரது வீட்டி (4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கிராமங்கள் தோறும் இந்திய முகாம்கள்

கொழும்பு, செப். 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் குக் கிராமங்களில் இந்திய அமைதிப் படையினர் முகாம்களை அமைத்துள்ளனர்.

இயக்கங்களுக்கிடையேயான மோதல்களைத் தடுக்குமுகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

மோதல்கள் தொடருமானால் ஆயுதங்களைத் தேடிச் சென்று கைப்பற்றும் நிலை ஏற்படும் என்று இந்திய அமைதிப் படையினர் தெரிவித்துள்ளனர். (இ-எ)

### மாகாணசபை அதிகாரங்கள்

## மூன்றும் கட்டப் பேச்சு நாளைவரை தொடரும்

கொழும்பு, செப். 18

மாகாண சபைக்கான அதிகாரங்கள் பற்றிய மூன்றும் சுற்றுப் பேச்சுக்கள் நேற்று கொழும்பு ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பமாகின.

இந்திய அரசுக் குழு (4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

18-09-1987
புரட்டாதி 2
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6.03முதல் 7.33வரை
ராகுகாலம்:-
10.33முதல் 12.03வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஏகாதசி விரதம்

## பண்டத்தரிப்பில்

பண்டத்தரிப்பு, செப்.18

பண்டத்தரிப்பு தபால் நிலையத்தில் மக்கள் அலுவல்கள் புதன்கிழமை நடைபெறவில்லை.

'ஸ்ரீலங்கா அரசின் நிர்வாகத்தை அனுமதிக்க மாட்டோம்' என்னும் வாசகங்கள் கொண்ட சுவரொட்டிகள் தபால் நிலையக் கதவுகள், ஜன்னல்களில் ஒட்டப்பட்டிருந்தன. (இ-120)

## வடமராட்சியில் இருந்து வந்த பேரணி

பருத்தித்துறை, செப் 18

பருத்தித்துறையிலிருந்து மாபெரும் பேரணி ஒன்று நேற்று யாழ் வந்தது

சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் திரு. திலீபனுக்கு உற்சாகமூட்டும் முகமாக வடமராட்சி மக்கள் வாகனங்களில் கட்டைப்பிராய் வரை வந்து அங்கிருந்து சுமார் நான்கு மைல் தூரம் பேரணியாக நல்லூர் மேற்கு வீதியை அடைந்தனர்.

இ போ ச பஸ்கள் மற்றும் மினி பஸ்களில் இவர்கள் வந்தனர். (இ-ஒ-118-169)

# திலீபனை இழந்தால் எனது ஏனைய பிள்ளைகள் போராட்டத்தை தொடர்வர்

## தந்தை கூறுகிறார்

- அலுவலகச் செய்தியாளர் க. இரத்தினராஜசிங்கம்

யாழ்ப்பாணம், செப். 18

எனது பிள்ளையை நான் இழந்தாலும் எனது அடுத்தபிள்ளைகள் தமிழீழத்துக்காக நிச்சயம் போராடுவார்கள்.

சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் திரு. திலீபனின் தந்தையார் நாகலிங்கம் இராசையா எமது செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

கவலை தோய்ந்த முகத்துடன்நஷனலும் வேட்டியும் அணிந்திருந்த திரு இராசையாவை பேட்டி கண்ட பொழுது அவர் கூறியதாவது.

கேள்வி:- திலீபனின் உண்மையான பெயர் என்ன?

பதில்:- இராசையா பார்த்திபன்; வயது 23 ஊரெழுவிலேபிறந்தவர், ஊரெழுவையே சொந்த இடமாகக் கொண்டவர்.

கேள்வி:- திலீபன் இயக்கத்தில் ஈடுபட என்ன காரணம்?

பதில்:- 1983 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது நடத்திய தாக்குதல்களைப் பொறுக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

### சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தால்

# 24 மணித்தியாலங்களில் ஒப்பந்தம் கிழிக்கப்படும்

## இந்தியப் படை திருப்பி அனுப்பப்படும்

### அநுரா இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, செப். 18

சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்த 24 மணித்தியாலங்களில் இந்திய — இலங்கை ஒப்பந்தம் கிழித்தெறியப்படும்; இந்தியத் துருப்புக்கள் திருப்பி அனுப்பப்படும்.

இப்படிச் சொன்னார் எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்கா.

கடந்த சனிக்கிழமை மத்துகமவில் சுதந்திரக் கட்சிப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

திரு. அநுரா பண்டாரநாயக்கா பேசும் சொன்னதாவது;

இந்தியாதான் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு முன்னர் ஆயுதங்களைக் கொடுத்தது. அதைத்தான் இப்போது திரும்பப் பெற்றுள்ளது

''உங்கள் அன்னையை மதிக்கின்றேன்; பாட்டனாரை மதிக்கின்றேன் ஆனால் உங்கள் இலங்கை விஜயத்தை எதிர்க்கின்றேன்'' — இப்படி நான் பிரதமர் காந்திக்குக் கூறிவிட்டேன்.

சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்த 24 மணித்தியாலங்களில் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டு இந்தியத் துருப்புக்கள் திருப்பி அனுப்பி வைக் [4ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையில் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★
★ சின்னஞ் சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★

## தேவை

மே ல தி க ஆட்கள் தேவை. Cooks 4 வெற்றிடம், Cashier 4 வெற்றிடம், Waiters 4 வெற்றிடம், இருபாலாரும் வயது 20—40 நேரில் வரவும் Green Peking Palace, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

குறுகிய காலத்தில் சலுகைக் கட்டணத்தில் கம்பியூட்டர் கல்வி Computer Programming (Basic) பயிற்சிக் காலம் 2 மாதம் கட்டணம் 750 ரூபா மட்டும். ஆரம்பம் 19-9-87 சனி, ஞாயிறு 1 30 p m. O/L படித்த இருபாலாரும் சேரலாம். சான்றிதழ் (Diploma) வழங்கப்படும். Unikco Computer Centre சுதுமலைச்சந்தி, மானிப்பாய், கே கே. எஸ் ரோட், 3ம்கட்டை, கொக்குவில்.

## வகுப்பு

பாலராசிரியர் பயிற்சி புதிய வகுப்பு விரைவில் ஆரம்பமாகின்றது க. பொ. த. (சா/த) குறைந்த தகைமையாகும் சனி,ஞாயிறுதினங்களில் வகுப்பு நடைபெறும் நேரில் சமுகமளித்துக் கற்க முடியாதோர் தபால் வழியும் பயிலலாம். பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (1519)


## இயக்கச்சி இராணுவம் வடமராட்சிக்கு?

கிளிநொச்சி செப் 18

இயக்கச்சியில் முகாமிட்டிருந்த இந்திய இராணுவம் ஞாயிற்றுக்கிழமை முதல் முற்றுகையிடப்பட்டதை அடுத்து இங்கிருந்த இந்திய ராணுவத்தினரும் சகல ராணுவ வாகனங்களும் வடமராட்சிப் பகுதிக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது.


# LANKA CEMENT LIMITED
## KANKESANTHURAI

**பொதிநிரப்பு நிலையத்தில் (PACKING PLANT) இருந்து சிமெந்துப் பொதிகளை கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள எமது உப களஞ்சியங்களுக்கு லொறிவண்டிகளில் ஏற்றிச் செல்லுதல்.**

எமது பொதிநிரப்பு நிலையத்தில் இருந்து கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது உப களஞ்சியங்களுக்கு சிமெந்துப் பொதிகளை லொறி வண்டிகளில் ஏற்றிச் செல்வதற்கான கேள்விப் பத்திரங்கள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் மீளப் பெற முடியாத வைப்புப் பணமாக ரூபா 50/ செலுத்தி கிழமை நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 3 30 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் நண்பகல் 12 00 மணிவரையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் 26-09-87 அன்று நண்பகல் 12 00 மணிக்குப் பின் விநியோகிக்கப்பட மாட்டாது

கேள்விப்பத்திரங்கள் 28-09-87 அன்று காலை 10 00 மணிக்கு முன் உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டகத்தில் சேர்க்கப்படவேண்டும். கேள்விப்பத்திரங்கள் 28-9-87 அன்று காலை 10.30 மணிக்குக் குலுக்கப்படும்.

பிரதி பொது முகாமையாளர்

லங்கா சிமெந்து லிமிட்டெட்

16-09-87 காங்கேசன்துறை.


# கிழக்கில் கொல்லப்பட்ட போராளிகள் எத்தனை பேர்?

மட்டக்களப்பு, செப். 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொல்லப்பட்ட புளொட், ஈ பி ஆர். எல், எப் இயக்க உறுப்பினர்களின் எண்ணிக்கை இதுவரை உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை.

பொதுசன வட்டாரங்களிலிருந்து கிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம் 75 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாமெனத் தெரியவருகின்றது.

ஆனால் பொலீஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. இவர்களில் ஒருசிலர் பொதுமக்கள்

மட்டக்களப்பு-கல்முனை வீதி கிரான்குளம் மினிபஸ் வழிமறிப்புக் கொலையில் 3 பெண்கள் உட்பட 9 பேரின் சடலங்கள் உறவினர்களிடம் திங்கட்கிழமை பிற்பகல் கையளிக்கப்பட்டன. இவர்களில் புளொட் பிரமுகர் மெண்டிஸ், ஈ. பி. ஆர். எல். எப் பிரமுகர் நாகேந்திரன் ஆகியோரும் அடங்குவர்.

இவர்களின் மரண விசாரணையின் பின்பு கொலைகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இறுதிச் சடங்குகள் சொந்தக் கிராமங்களில் நடைபெற்றன.

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் கிரான் என்னும் இடத்தில் புளொட் உறுப்பினர்கள் பயணஞ்செய்த வாகனத்தில் 19 உறுப்பினர்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டனர்.

இவர்களில் புளொட் தலைவர்களில் ஒருவரான இரா. வாசுதேவா, பிரமுகர்களான பவானந்தன், கண்ணன் ஆகியோரும் அடங்குவர்.

மறுநாள் இவர்களின் சடலங்கள் ஒரு குழுவினரால் எடுத்துச்செல்லப்பட்டன. ஆனால் இதுவரை தகவல் இல்லை.

## சிலருடைய சடலங்கள் எடுத்துச்செல்லப்பட்டுவிட்டன

உன்னிச்சையில் புளொட் இயக்க அலுவலகத்தில் 7 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மணல்சேனையில் ஈ பி ஆர். எல் எப். உறுப்பினர் மூன்று பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பழுகாமத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ. பி. ஆர். எல். எப் பிரமுகர் பொ நடேசமூர்த்தி மரணம் கொலையென தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

செங்கலடி-பதுளை வீதி மரப்பாலம்-6, போரதீவு-2 மண்டூர்-2 மகிழூர்-2, வெல்லாவெளி-2 என மேலும் புளொட், ஈ பி. ஆர். எல். எப். உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

சித்தாண்டியில் ஞாயிறு இரவு கடத்தப்பட்ட 11 பேர் திங்கள் காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்கள் இதே சடலங்களைப் பார்வையிட்ட பஸ்ஸில் வந்த நபரொருவர் சந்திவெளியில் இறக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார். சடலம் ஏறூவூர் பொலீஸில் வைக்கப்பட்டுள்ளது

இந்திய அமைதி காக்கும் படை அந்தந்த இடங்களுக்குச் சென்று தகவல்களைச் சேகரிக்கின்றது. ஸ்ரீ லங்கா பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மோதல்கள் இடம் பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படும் இடங்களுக்கு ஸ்ரீலங்கா பொலீஸார், இந்திய அமைதிகாக்கும் படையினர் விரைகின்றனர். இரு தரப்பும் தனித்தனியாக பாதுகாப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

மேற்படி சம்பவங்களில் கொல்லப்பட்டவர்களைவிட 11 பேர் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜெகநாதன் [17வயது] மட்டக்களப்பு, கிருஸ்ணபிள்ளை [65 வயது] பெரிய புல்மலை, இரத்தின சிங்கம் [26 வயது] பெரிய நீலாவணை, சிராளன் [18 வயது] காரைதீவு, வின்சன் [23 வயது] கல்முனை இந்த ஐவர் ஆகியோரே கொம்மாதுறையில் காயமுற்றவர்கள்.

கிரான்குளம் பஸ் சம்பவத்தில் காயமுற்றோர் விவரம் வருமாறு: இ. நீதாஸ்வரன் [26 வயது] இ நடேசலிங்கம் [24 வயது] த. செல்வம் [23 வயது] ம. இவநேசன் [24 வயது] ஆர். உதயகுமார் [23 வயது] க சோபால் [33 வயது] (பனைவி பூமணி இறந்துவிட்டார்), இவர்கள் காரைதீவு 3ஆம் பிரிவு வாசிகள்.

இது இவ்வாறிருக்க சந்திவெளியில் புளொட் உறுப்பினர் வீடொன்று தீ-கிரையாக்கப் பட்டுள்ளது.

தீ அருகிலுள்ள இரு வீடுகளுக்கும்பரவியதால் அந்தவீடுகளும் எரிந்தன. (இ-21)

# இயக்க மோதலால் ஒதுங்கியவரும் பலி!

## மரண விசாரணையில் அவரின் தங்கை தகவல்

மட்டக்களப்பு செப்.18

காலஞ் சென்ற எனது அண்ணா ஒரு காலத்தில் ஈ.பி.ஆர் எல் எப் இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் ஆனால் இயக்க மோதல்கள் காரணமாக சில மாதங்களுக்கு முன்பு ஒதுங்கிக் கொண்டார்.

பெரியபோரதீவில் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி. ஆர்.எல்.எப் பிரமுகரான பொ நடேசமூர்த்தி (30 வயது) என்பவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த சகோதரி திருமதி ஆறுமுகம் மகேஸ்வரியம்மா [28 வயது] மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பழுகாமம் வாசியான நடேசமூர்த்தி பெரிய போரதீவு பஸ் தரிப்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மரணவிசாரணை பதில் நீதிபதி திரு. தங்கவடிவேல் முன்னிலையில் நடைபெற்றது.

சாட்சி மேலும் கூறியதாவது:-

இயக்க நடவடிக்கையிலிருந்து ஒதுங்கிக் கொண்ட எனது அண்ணா வெளி நாட்டில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு கொண்டிருந்தார் சம்பவ தினம் பிற்பகல் 3-30 மணிக்கு வீட்டிலிருந்து கொழும்பு செல்ல பஸ்தரிப்பு நிலையம் சென்றார். வைத்திய பரிசோதனை அலுவல்களுக்காக கொழும்பு செல்லவிருந்தார். 2,000 ரூபா பணமும் வைத்திருந்தார்.

பிற்பகல் 5-30 மணி அளவில் சிறுவன் ஒருவன் வந்து இவர் சுடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தான். சுட்டது யார் எனத் தெரியாது.

இப்படி அவர் கூறினார்.

விசாரணை முடிவில் கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது. (இ-21)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப் 18

இலங்கை சாரணர் சங்கத்தினால் அக்டோபர் முதலாம் திகதி அமுல் படுத்தப்படவிருக்கும் சாரணர்களுக்கான புதிய திட்டம் தொடர்பான கருத்தரங்கு யாழ் பரியோவான் கல்லூரியில் உப அதிபர் திரு. கே. என். பொன்னையா தலைமையில் நடைபெற்றது

இது தொடர்பாக இலங்கையில் நடைபெற்ற முதல் கருத்தரங்கு இதுவாகும். (இ)

## மரக்கூட்டுத்தாபன விறகு விலை இறங்காதது குறித்து மக்கள் அதிருப்தி

அச்சுவேலி, செப். 18

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தில் விறகு விலை குறைக்கப்படாதது குறித்து மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

அரசாங்க மரக்கூட்டுத்தாபன விறகு காலையில் விறகின் விலை சென்ற வருடம் தூக்கு ஒன்று 41 ரூபா 40 சதமாக இருந்து வந்தது.

எரிபொருள் தடை, போக்குவரத்து சீர்குலைவு மற்றும் காரணங்களை வைத்து அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் விறகின் விலையைத் திடீரென 61 ரூபா 60 சதமாக அதிகரித்தது.

அந்த நேரத்தில் இந்த விலை அதிகரிப்பு நியாயமானதாகவும் மக்களுக்கு தெரிந்தது.

இடைக்காலத்தில் விறகின் விலை 58 ரூபா 85 சதமாகக்குறைக்கப்பட்டு தற்பொழுதும் இந்த விலைக்கே விறகு விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போதைய நிலையில் மரக்கூட்டுத்தாபன விறகின் விலை சீர்படுத்தப்படாதது குறித்து மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (இ-11)

## படகுச்சேவை வாரத்தில் 4 நாட்கள் மட்டுமே

நெடுந்தீவு, செப். 18

நெடுந்தீவு-குறிகாட்டுவான் அரச மோட்டார் படகுச்சேவை தொடர்ந்தும் வாரத்தில் நான்கு தினங்களுக்கு மட்டுமே இடம் பெறுகின்றது.

தற்சமயம் இச்சேவையில் குமுதினி படகு மட்டுமே ஈடுபட்டுள்ளது. இதனால் தபால் சேவையும் நான்கு நாட்களுக்கு மட்டுமே நடைபெறுகின்றது.

இதனிடையே ஊர்காவற்றுறை- அனலைதீவு சேவையில் உள்ள அலையரசியின் திருத்த வேலைகள் விரைவில் பூர்த்தியடையலாம் எனவும் அது முடிவடைந்ததும் ஊர்காவற்றுறை அனலைதீவுச் சேவை வழமை போல் நடைபெறும் எனவும் கூறப்படுகின்றது (ஓ-ரி)

## செய்திக்கொத்து

### முல்லைத்தீவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

முல்லைத்தீவு, செப். 18

முல்லைத்தீவில் வைத்து அண்மையில் சடத்திச் செல்லப்பட்ட ஆறு இளைஞர்களையும் விடுதலை செய்யக் கோரியும் இயக்க மோதல்களைத் தவிர்க்கக் கோரியும் நேற்று முல்லைத்தீவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

இதேவேளை கடைகள் அனைத்தும் மூடப்பட்டு ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது.

ஊர்வல முடிவில் இந்திய இராணுவத்தினரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது

ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். (இ-10-ரி)

### சைவசமய பொதுஅறிவுப் போட்டி

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் இந்து சமய அபிவிருத்திச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கிடையே சைவ சமய பொது அறிவுப் போட்டி ஒன்றை நடத்த உள்ளது.

இப்போட்டி எதிர் வரும் 27-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும். [ஓ-69]

### மற்றும் ஒருவரும் தப்பினர்

வடமராட்சி, செப். 18

அகதிகளுடன் கடலில் மூழ்கிய படகில் பயணம் செய்த இன்னொருவர், இந்திய மீன்பிடியாளர்களினால் காப்பாற்றப்பட்டு இராமேஸ்வரத்தில் உள்ள அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

இப்படகு 10ஆம் திகதி கடலில் மூழ்கியது அது சம்பந்தமான செய்தி ஏற்கனவே உதயனில் வெளிவந்தது தெரிந்ததே.

அதில் இருந்த நால்வரில் ஒருவர் இந்தியக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டார் என்பது தெரிந்ததே.

ஏனைய மூவரின் விவரம் தெரியாமல் இருந்தது.

அம்மூவரில் ஒருவரான சோமயானந்தம் புத்திரசிகாமணியே இப்போது இராமேஸ்வரம் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார் என்று உறவினர்களுக்குத் தகவல் வந்து உள்ளது.

ஏனைய இருவரின் விவரம் தெரியவில்லை. [இ-எ-160[

### எழுப்புதல் கூட்டம்

மானிப்பாய், செப் 18

யாழ்ப்பாணம் ஐக்கிய கிறிஸ்தவசங்கம், யாழ்ப்பாணம் வை எம். சி ஏ ஸ்காபஸம் ஆகியன இணைந்து யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் எழுப்புதல் கூட்ட நிகழ்ச்சியை நடத்தின.

அருட்திரு டி எஸ். தியாகராசா அருளுரை வழங்கினார். மூன்று தினங்களாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது. (இ-90)

### கல்வி அதிகாரி அறிவுரை

யாழ்ப்பாணம், செப். 18

எல்லா அபிவிருத்திக்கும் மூலகாரணம் ஒழுக்கத்தை வளர்த்தலாகும். பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களது ஒழுக்கத்தில் கூடுதலாகக் கரிசனை செலுத்தாவிட்டால் சமூகத்தில் மாணவர்கள் சஞ்சலத்துடனேயே வாழவேண்டிய நிலை ஏற்படும். சகல மதங்களும் போதிக்கும் நல் லொழுக்கங்களை மாணவர் போற்றவேண்டும்.

இவ்வாறு யாழ் வண்ணார்பண்ணை இளையதம்பி தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற தருமவார நிகழ்ச்சியில் பேசிய வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி அறிவுரை ஆற்றினார்.

அதிபர் கா. கணேசநாதன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.


விற்பனையாகின்றது!

ஆரம்ப விஞ்ஞானம்
மதிப்பீட்டு பயிற்சி
ஆண்டு 4, 5, 6,
New Class Work Book for English
YEAR 4, 5, 6, 7, 8
மாணவர்களுக்கான
சமூகக்கல்வி
பாடப் பொழிப்பும், தொழிற்பாடும்
பயிற்சிகளும்
ஆண்டு 6
புதிய பாட நூல்களையும்
பாடத்திட்டத்தையும் தழுவியது
(முதற்பதிப்புக்கள்)
வெளியீடு:
ஞானசுரபி புத்தகக் கம்பனி,
யாழ்ப்பாணம்.

பிரிவு II

★ DAY CLASS ★

திங்கள் — வெள்ளி 8-30 — 12-30

ஆரம்பம்:- 18 . 09 . 87
காலை 8 - 30 மணி

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)

| | | |
|---|---|---|
| 8-30 | CHEMISTRY | -சேதன ரசாயனம் |
| 9-30 | PHYSICS | -புலங்கள் |
| 10-30 | BOTANY | -தாழ்வகைத் தாவரங்கள் |
| 11-30 | ZOOLOGY | -இழையவியல் |
| 10-30 | Applied Maths | -காவிகள் |
| 11-30 | Pure Maths | இருபடிச் சமன்பாடுகள் |

குறிப்பு:-
பிரிவு I இற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது

★ விவரங்கட்கு:-
New Master Institute
B M. C. Lane, JAFFNA.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



உ
சிவமயம்

# சப்தாப்த பூர்த்தி மணிவிழா

(70ஆம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சி)

புங்குடுதீவு :: மடத்துவெளி.

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு

**சிவஸ்ரீ நா. கணேசராஜக்குருக்கள்**

(சின்னத்துரைக் குருக்கள்) அவர்களின்

எழுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட பூஜை வழிபாடும் இலக்கிய சிறப்பு நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

★ அனைவரையும் வந்துகலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்

இடம்: புங்குடுதீவு மடத்துவெளி
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றல்

காலம்: 20 - 09 - 87 ஞாயிற்றுக்கிழமை

நிகழ்ச்சிநிரல்

காலை 6-00 மணிமுதல்: கணபதிஹோமம், அபிஷேகம், நவக்கிரகமகம், ஆயுஸ்சூக்த ஹோமம், மிருத்துஞ்ச ஹோமம், பிராமண சமாராதனை.

மாலை 2-00 மணி முதல்: குருபூஜை, தம்பதிகள் பூஜை, தானங்கள், ஆசியுரை, வாழ்த்துரை

இலக்கியச் சிறப்பு விருந்து

தலைவர்: திரு க. அம்பலவாணர்,
(வீரகத்திவிநாயகர் ஆலய பரிபாலனசபைத் தலைவர்)

சிறப்புரை: வித்துவான் க. சொக்கலிங்கம், M A.
(சொக்கன்) அவர்கள்

ஆசியுரை: அருள்மொழி ஆசி. திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள்

வாழ்த்துரை: I. முத்தமிழ்குருமணி
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்கள்
II. சித்தாந்த நல்லறிஞர்
சிவஸ்ரீ கு ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்கள்

"பட்டிமண்டபம்"

நடுவர் திரு. இ. ஜெயராஜ், (கம்பன் கழக அமைப்பாளர்)

பொருள்: செஞ்சோற்றுக்கடன் தீர்த்ததில் உயர்ந்து நிற்பவன்

| கர்ணனே | கும்பகர்ணனே |
|---|---|
| திரு. புலவர், ஈழத்துச்சிவானந்தன் | காரை செ. சுந்தரம்பிள்ளை M.A |
| திரு. க. நாகேஸ்வரன் B.A.(Hons) | திரு. தி. திருநந்தகுமார் |
| திரு. க. குமாரதாசன் | திரு. த. சிவகுமாரன் |

● மாலை 5 மணி முதல் நாட்டியச்சிறப்பு விருந்தும் நடைபெறும் ●

நன்றியுரை : திரு. ப. கனகலிங்கம்
(ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைச்செயலாளர்)

பூவாலி பவனம்,
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில்,
மடத்துவெளி.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மனம் ஒருமைப்படாவிட்டாலும், தூய மந்திரத்தை ஜெபிப்பதை விட்டுவிட வேண்டாம். உங்கள்கடமையை நீங்கள் ஆற்றுங்கள்.

— அன்னை சாரதாதேவி

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 892/2 நாவலர் வீதி, தொலைபேசி 24808
யாழ்ப்பாணம். 28078
18.9.1987 உ.வெ.இல - 23

# விழலுக்கு இறைத்த நீராகலாமா...?

கிழக்கில் நிலைமை மேலும் மோசம் அடைந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. விடுதலைப் போராளிகள் குழுக்கள் இடையேயான மோதல்கள், அங்கு, கட்டுக்கடங்காத அளவுக்கு நடந்து வருகின்றன. இறந்தவர்களின் எண்ணிக்கை எண்பது வரைக்கும் உயர்ந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

போராளிகள் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் நிராயுதபாணிகளாக இருப்பினும், சுதந்திரமாக, அச்சமின்றி, பாதுகாப்புடன் வாழும் நிலை அங்கில்லை. தங்களது உயிர்களுக்கு எந்த நேரமும் ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்துடன், மனப்பயத்துடன், பதற்றத்துடன் அவர்கள் வாழ வேண்டி உள்ளது.

இயக்கங்களைச் சேர்ந்த இருநூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் இந்திய இராணுவம், ஸ்ரீலங்கா இராணுவம் ஆகியவற்றிடம் அடைக்கலம் புகுந்துள்ளார்கள். சொந்தச் சகோதரர்களுக்குப் பயந்து மாற்றானிடம் தஞ்சம் புகும் வெட்கக்கேடான நிலை உருவாகி இருக்கிறது.

தமிழர்கள் எந்த விடயத்திலும் ஒற்றுமை காக்கத் தெரியாதவர்கள் என்ற அவமானம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுக்குள் தாமே கொலை செய்து அழிகிறார்கள் என்ற அவமதிப்பு உண்டாகி இருக்கிறது. மொத்தத்தில் ஈழத்தமிழர்களின் மானம், மரியாதை, மதிப்பு எல்லாம் கப்பல் ஏறுகின்றன.

தமிழ் மக்களின் சுதந்திரத்துக்காகவும், உரிமைகளுக்காகவும் போராடியவர்கள், தங்கள் உயிர்களையே தியாகம் செய்து களத்தில் குதித்தவர்கள் தமிழ் இளைஞர்கள். ஆனால் அவர்களிடையே ஒற்றுமை இல்லை. ஒற்றுமை இல்லை என்றால் வெற்றியும் ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை.

சுதந்திரம் என்ற புனிதமான இலட்சியத்தை அடைவதற்குப் பல பாத்தியதைகள் தேவை. மனஉறுதி, வீரம், தியாகம், ஒற்றுமை என்பன அவற்றில் மிகவும் முக்கியமானவை – பிரதானமானவை. அவற்றில் ஒற்றுமை மிகமிகப் பிரதானம்.

சுதந்திர இலட்சியத்துக்காக உழைப்பவர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லையேல் அதனைப் பயன்படுத்தி விரோத சக்திகள் ஊடுருவி இலட்சியப் பாதைக்கு முட்டுக்கட்டை போடும்; அல்லது வேறு வழி திருப்பிவிடும். இதனை உணராமல் நடந்து கொள்வது விவேகமாகாது.

போராளிகள் தங்களிடையே மோதிக்கொண்டு சாவதனால் சுதந்திரப் போராட்டம் மாசுபட்டுவிட்டது. மாசு கண்ட ஒரு விடயம் தொடர்ந்து நடைபெறுவதற்கோ அல்லது இலட்சியத்தில் வெற்றி காண்பதற்கோ வாய்ப்பு மிகமிகக் குறைவு. இதனை நாம் சொல்லவில்லை. சரித்திரம் சொல்கிறது.

எனவே தமிழ் மக்களின் சுதந்திரத்தில் போராளிகளுக்கு உண்மையான பற்றும், நாட்டமும் இருந்தால் அவர்கள் தமக்கிடையே அடிபடுவதை நிறுத்தவேண்டும். தங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகளைப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

வடக்கு – கிழக்கு இணைப்புக்குக் கிழக்கில் எதிர்ப்பை உண்டாக்க, அதற்காக மக்களைத் தூண்டிவிட, எத்தனையோ சக்திகள் காத்திருக்கின்றன. அப்படியிருக்க கிழக்கில் வைத்தே போராளிகள் மோதிக்கொள்வது அந்தச் சக்திகளுக்குச் சாப்பாடு போட்டது போலாகும்.

போராளிகளின் பேரில் தீயசக்திகள் கிழக்கு மக்களைத் துன்புறுத்தி அவர்களை இணைப்புக்கு எதிராகத் தூண்டிவிடவும் வழி உண்டாகும்.

மட்டக்களப்புப் பிரசைகள் குழுவின் செயலாளர் திரு. சாம் தம்பிமுத்துவைக் கொலை செய்வதற்கு முகமூடி மனிதர்கள் சென்ற சம்பவம், மூன்றாவது சக்திகள் கிழக்குத் தமிழர் மத்தியில் பதற்றத்தையும் பீதியையும் உண்டாக்கி அவர்களைத் திசை திருப்ப முயல்கின்றன என்பதை எடுத்துக்காட்டுவதாகும்.

வடக்குக் – கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் மத்தியில் எதிர்ப்பை உருவாக்குவதற்காக கல்முனை மோதல்கள் போன்ற சம்பவங்கள் மூன்றும் சக்திகளால் உருவாக்கப்பட்டன. அவற்றுக்கு முஸ்லிம் மக்கள் துணைபோகக் கூடாது என்று கேட்கிறோம்.

அவ்வாறு கேட்டுக்கொண்டே போராளிகள் அமைப்புகள் தாம் மோதிக்கொண்டு, மூன்றும் சக்திகள் அவற்றின் நோக்கத்தை அடைவதற்கு இடம் கொடுக்கலாமா?

போராளிகள் இயக்கங்களே! இவை குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள். ஒற்றுமைப் படுங்கள். இல்லையேல் சுதந்திரமும் கிடையாது; உரிமைகளும் கிடையாது எல்லாம் வெட்டிப் பேச்சாகவே முடியும். இதுவரை பட்ட கஷ்டங்களும், செய்த தியாகங்களும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும்.

# வளைகுடாவில் சண்டை உக்கிரம் அடைந்தது

தெஹ்ரான், செப். 17

ஒரு வாரகாலத்தின் பின்னர் வளைகுடாவில் மீண்டும் சண்டை அதிகரித்து உள்ளது.

ஐ. நா பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் சமாதானப்பயணம் ஒன்றை மேற்கொண்டு தெஹ்ரான், பாக்தாத் நகரங்களுக்கு விஜயம் செய்தபோது சண்டை தணிந்து இருந்தது.

அதன் பின்னர் மீண்டும் சண்டை ஆரம்பித்திருப்பதாக வளைகுடாச் செய்திகள் தெரிவித்தன.

ஈரானுக்குச் சொந்தமான கார்க் தீவில் உள்ள எண்ணெய்க் குதங்கள், சப்ளை நிலையங்கள் மீது ஈராக் விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல்களை நடத்தின.

ஈரானும், ஈராக் நகரான பஸ்ரா மீது விமானத் தாக்குதல்களை நடத்தியது.

இதனிடையில், ஐ நா. பொதுச்செயலாளர் பெரெஸ் டி குயிலர் வளைகுடாப்பயணம் பற்றிய அறிக்கையை ஐ நா பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பித்தார்.

அறிக்கையில் தான் தெரிவித்துள்ள கருத்துக்களை இரகசியமாகத் தற்போதைக்கு வைத்து இருக்கும்படியும் பொதுச் செயலாளர், உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார். (இ-எ)

# உடன்பாடு ஒன்றை எட்டும் நிலையில்

## அமெ: சோவியத் அரசுகள்

மாஸ்கோ, செப் 17

இடைநிலை குறைந்த தூர அணு ஆயுதங்களை ஒழிப்பது சம்பந்தமான உடன்பாடு ஒன்று அமெரிக்க – சோவியத் அரசுகளுக்கு இடையே எட்டப்படலாம்.

இதுசம்பந்தமாக அமெரிக்க அதிபர் றேகன் — சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் ஆகியோருக்கு இடையே இவ்வருட இறுதிக்குள் உச்சி மாநாடு ஒன்றை நடத்தும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இத்தகவலை சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவே மாஸ்கோவில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்து இருக்கின்றார்.

இதனிடையில் வாஷிங்டனில் அமெரிக்க சோவியத் வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையே முதலாவது சுற்றுப் பேச்சுக்கள் கடந்த செவ்வாய் நடந்தன.

இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் புதன்கிழமை நடந்தன.

ஆயுதக் கட்டுப்பாடு, மனித உரிமை மீறல்கள், பிராந்தியப் பிரச்சினைகள், நடுத்தர ஏவுகணை, ஆயுதக் குறைப்பு ஆகியனபற்றி இரண்டு அமைச்சர்களும் புதன்கிழமைப் பேச்சுக்களின் பரிசிலனை செய்தனர்.

# ஐரோப்பிய பொருளாதார சமூகம் கண்டனம்

பிரஸ்ஸல்ஸ், செப். 17

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இஸ்ரவேல் யூதக் குடியேற்றங்களை அமைப்பது சட்டவிரோதமான நடவடிக்கையாகும்.

இப்படி ஐரோப்பிய பொருளாதார சமூகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்குப் பிரச்சினையில் அமைதித் தீர்வை ஏற்படுத்துவதற்கு இச் சட்டவிரோதக் குடியேற்றம் உதவாது என்றும் ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் எச்சரித்துள்ளது. (இ-எ)

# தென் கொரியாவுக்கு புதிய அரசமைப்புச் சட்டம்

## கட்சிகளிடையே உடன்பாடு

சோல், செப் 17

தென்கொரியாவுக்குப் புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்றை உருவாக்குவதில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் வெற்றி கண்டுள்ளன.

இதன்படி எதிர்வரும் அக்டோபரில் புதிய அரசமைப்புச் சட்டம் பற்றிய சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

டிசம்பருக்கு முன்னர் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும்நேரடித்தேர்தல் நடத்தப்படும்.

புதிய ஜனாதிபதி 1988 பெப்ரவரியில் பதவி ஏற்பார்.

நாடாளுமன்றத் தேர்தலை எப்போது நடத்துவது என்பது பற்றி புதிய ஜனாதிபதியே தீர்மானிப்பார்

புதிய அரசமைப்புச் சட்டம் அடுத்த வாரத்தில் தென்கொரிய நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்படும். (இ-எ)

# பாரதியார் படைப்புகள்

## மொழி பெயர்க்கப்பட்டிருந்தால் நோபல் பரிசு கிடைத்திருக்கும்

சென்னை, செப் 17

மகாகவி பாரதியாரின் படைப்புக்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டிருந்தால் அவருக்கும் நோபல்பரிசுகிடைத்திருக்கும்.

தமிழ்நாடு அமைச்சர் வி. வி. சுவாமிநாதன் இப்படிச் சொன்னார்.

இரண்டுநாள் பாரதியார் விழாவைதொடக்கி வைத்துப் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ரவீந்திரநாத் தாகூரின் படைப்புக்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டதனால்தான் அவருக்கு நோபல் பரிசு கிடைக்கக்கூடியதாக இருந்தது.

பாரதியார் உயிருடன் இருந்தபோது அவரின் பெருமையை மக்கள் உணரவில்லை.

இப்படி அமைச்சர் மேலும் சொன்னார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானகிராமணியார் பேசுகையில், 'பாரதியாரைத் தேசியக் கவிஞராக மத்திய அரசால் பிரகடனம் செய்யவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

பாரதியார் சங்கம் இவ்விழாவை ஒழுங்கு செய்திருந்தது.

சங்கத்தின்செயலாளர் திரு. பகீரதன் பேசுகையில் சென்னையில் வள்ளுவர் கோட்டம் போன்று பாரதியார் கோட்டமும் நிறுவப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பாரதியாரின் பேர்த்தி திருமதி லலிதா பாரதி பாரதி பாடல்கள் பாடினார். (இ-எ)

# வெளி...

## பெஷாவாரில் 9 பேர் பலி!

இஸ்லாமபாத், செப். 17

பெஷாவாரில் இடம் பெற்ற கார்க் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

ஏழுபேர் அந்த இடத்தில் உயிரிழந்தனர்.

இரண்டு பேர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தனர்.

பலகடைகள், கார்கள் தீப்பற்றி எரிந்தன. குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்த இடத்தில் பெரும் அழிவு ஏற்பட்டது (இ-எ)

# எதியோப்பியாவில் நாடாளுமன்ற ஆட்சிமுறை

அடிஸ்அபாபா, செப்.17

எதியோப்பியா தனது 2,500 ஆண்டு காலச் சரித்திரத்தில் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற ஆட்சி முறையை அண்மையில் ஏற்றுக்கொண்டது.

நாடாளுமன்றத்தை எதியோப்பிய மொழியில் 'ஷெங்கோ' என்று அழைக்கப்படுகின்றது

எண்ணூறு உறுப்பினர்கள் கொண்டது இந்த நாடாளுமன்றம். பின்வருவோரை ஜனாதிபதி, உப ஜனாதிபதி, பிரதமர் ஆகத் தெரிவு செய்தது.

ஜனாதிபதி: லெப்டினன்ட் கேர்ணல் மெங்கிஸ்டு ஹெயிலி மரியம்.

உப ஜனாதிபதி: பிஸ்ஸ ஏ. டெஸ்டா.

பிரதமர்: பிக்றி செலாஸி வோக்டெறஸ். [இ-எ]

# ஆயுதம் பறிக்கப்பட்டதால் கிழக்கில் குடியேற்றத்தை தடுக்க முடியாத நிலைமை

## அமைதிப்படை இருந்தும் மக்கள் காடுகளில்

### மில்லர் அஞ்சலிக் கூட்டத்தில் யோகி உரை

கரவெட்டி, செப். 18

எமது ஆயுதங்கள் பறிக்கப்பட்டதால் கிழக்கில் நடக்கும் சட்ட விரோத சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க முடியாத நிலையில் இருந்து வருகிறோம். இந்திய அமைதிப்படை இருந்தும் கிழக்கில் மக்கள் பலர் இன்னும் காடுகளிலேயே இருந்து வருகின்றனர்

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த யோகி மேற்கண்டவாறு கூறினார்.

துன்னாலை தாமரைக் குளம் மைதானத்தில் கரும்புலி மில்லரின் 60 ஆவது நாள் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

துன்னாலை பிரசைகள் குழுத்தலைவர் திரு.ஏ.வி தங்கராஜா கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு. யோகி மேலும் உரையாற்றுகையில் :– போராட்டம் கூர்மை அடைந்து வரும் போது பேச்சுவார்த்தை, ஒப்பந்தம் என்றெல்லாம் கூறி போராட்ட வடிவம் மாற்றி அமைக்கப்படுகின்றது.

திம்புவில் நாலம்சக் கோரிக்கை வைக்கப்பட்டது. அதை இலங்கை அரசு ஏற்க மறுத்தது.

அப்போது பிரபாகரனுக்கு முதல்வர் பதவி தருவதாகக் கூறப்பட்டது. அதற்குத் தலைவர் நான் இப்போதும் வடமாநிலத்துக்குமுதல்வரே கிழக்கு மாகாண மக்களுக்கு துரோகம் செய்ய விரும்பவில்லை என்று கூறினார்.

தற்போது ஒப்பந்தம் கைச்சாத்தாகியும் கிழக்கு மாகாணத்தில் குடியேற்றம் நடைபெறுகின்றது. இதை இந்திய அமைதிப்படையினால் தடுக்க முடியாத நிலையில் ஆயுதங்கள் பறிக்கப்பட்டுள்ளன.

இந்தியஅமைதிப் படையால் எமக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் இடையே ஏற்படும் மோதலையே தடுக்க முடியும். இதனால் தேர்தல வைத்து இணைப்பது ஓர் கேலிக்கூத்து

இந்தியாவிற்கு எந்தளவுக்குத் திருகோணமலை முக்கியமோ அதைப் போல் கொழும்பும் முக்கியம். இந்து சமுத்திரத்தில் அமெரிக்க ஊடுருவலை தடுக்கவே இந்தியா தலையிட்டுள்ளது.

அமைதிப்படை இருந்தும் கிழக்கு மாகாணத்தில் மக்கள் காடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இன்னும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியவில்லை

ப்படி அவர் கூறினார்.

காசிஆனந்தன் பேசுகையில்:-

யாழ் குடாநாட்டில் சம்பளம் கொடுப்பது மட்டுமே தற்போது ஸ்ரீலங்கா அரசின் செயற்பாடு சிவில் நிர்வாகம் புலிகளின் கையில். இராணுவம் இந்தியாவின் கையில் இங்கு மூன்று அரசுகள் செயற்படுகின்றன. இந்த நிலையை இங்கு கொண்டு வரக் காரணமாக இருந்தது கப்டன் மில்லரின் தியாகமே திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவிலும் கடைசியாக வடமராட்சியிலும் நடந்த படுகொலைகளைப் பார்த்துக் கொண்டிருந்த இந்தியா இப்போது ஜெயவர்த்தனாவுக்கு உயிர்ப்பாதுகாப்பு அளித்து வருகிறது என்றார். (இ-70)

# சமய நந்திகளில்

## சிறப்பாக நிகழ்ந்தது

யாழ்ப்பாணம், செப். 18

நாவற்குழி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த 14-09-87 திங்களன்று மகா கணபதி ஹோமம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நாட்டின் ஷேமம் குறித்து நடைபெற்ற இந்த கணபதி ஹோமம் சிவஸ்ரீ இ. கந்தசாமிக் குருக்களால் முன்னின்று நிகழ்த்தப் பெற்றது. (இ)

### ஞானக்கதிர்

வழமையாக வெள்ளிக் கிழமைகளில் வெளிவரும் 'ஞானக் கதிர்'' இடமின்மை காரணமாக இன்று இடம் பெறவில்லை.

# பொலீஸ் நிலையங்களில் வாகனங்கள்!

மஹியங்கனையில்உள்ள அரசதிணைக்கள வாகனங்கள் எல்லாம் பாதுகாப்புக்கா மஹியங்கனை பொலீஸ் வளவில் இரவு நேரங்களில் நிறுத்தப்படுகின்றன.

சிங்களத் தீவிரவாதிகள் வாகனங்களைக் கடத்திச் செல்லக்கூடும் என்ற அச்சத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-எ)



### பொய்யாமொழி

குறள்:

இன்மையின் இன்னது உடைமை முறை செய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

பொருள்:

முறை செய்யாத அரசனுடைய கொடுங்கோல் ஆட்சியின் கீழ் இருக்கப் பெற்றால், பொருள் இல்லாத வறுமை நிலையை விடச் செல்வ நிலை துன்பமானதாகும்.

# இடை நடுவில் படிப்பைக் கைவிட்ட போராளிகள் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்புக் கிடைக்கும்

கொழும்பு, செப்.18

பல்கலைக் கழகப் படிப்பை இடை நடுவில் கைவிட்டு போராளிகள் அமைப்புக்களில் சேர்ந்த இளைஞர்கள் விரும்பினால் மீண்டும் படிப்பைத் தொடர அனுமதிக்கப்படலாம்.

பல்கலைக்கழக மான்யக் கமிஷன் தலைவர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே இதனைத் தெரிவித்தார்.

திங்கள் நடந்த செய்தியாளர் மாநாட்டில் டாக்டர் கல்பகே மேலும் சொன்னதாவது:

யாழ் சென்றிருந்த மொரட்டுவ பல்கலைக் கழக உபவேந்தர் வில்லி மெண்டிஸை சில பட்டதாரி மாணவர்கள்சந்தித்தனர். குழப்பப்பட்ட படிப்பைத் தொடர அவர்கள் அனுமதி கேட்டனர்.

''இக்கோரிக்கையை நாம் பரிசிலனை செய்ய வேண்டும்.

தேசிய நீரோட்டத்தில் மீண்டும் அவர்கள் வந்து சேரவேண்டும். அதற்கு நாம் உதவவேண்டும்.

''நாம் ஒன்றிணைந்து மனப்புண்ணை ஆற்ற வேண்டும்''—

இப்படி டாக்டர் கல்பகே தெரிவித்தார். (ஒ-எ)

# இந்தியப் படை எடுத்தநடவடிக்கை என்ன?

கொழும்பு, செப் 18

தமிழ் இயக்கங்களுக்கு இடையேயான மோதல்களைக் கட்டுப்படுத்த இந்திய அமைதிப்படை என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது என்பது பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஜனாதிபதியைச் செவ்வாய்க் கிழமை சந்தித்து இவ் விவரங்களைத் தெரிவித்தார். (இ-எ)

# இயக்க மோதல்களில் கொலைகளைச் செய்பவருக்கு மன்னிப்புக் கிடையாது

## இணைப்பதிகாரி கூறுகிறார்

கொழும்பு, செப். 18

இயக்க மோதல்களில் கொலைகளைச் செய்பவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படமாட்டாது. அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரியும் பொலீஸ் அதிபருமான நிமால் டீ சில்வா இதனைத் தெரிவித்தார்.

உயிரைக் காப்பாற்ற ஓடிவரும் போராளிகளுக்கு அடைக்கலம் வழங்க பொலீஸ் நிலையங்கள் தயாராக உள்ளன.

அவர்களின் உயிர்களுக்கு நாம் உத்தரவாதம் வழங்குகின்றோம். அத்துடன் கொலைகளைச் செய்வோரைப் பிடித்துச் சட்டத்துற்கு முன் நிறுத்துவோம் என்றும் உத்தரவாதம் கொடுக்கின்றோம்.

எந்தப் போராளி அமைப்பைச் சேர்ந்தவருக்கும் அடைக்கலம் வழங்குவோம்; அவர்கள் விடுதலைப் புலிகளாக இருந்தாலும் சரி

இப்படி திரு. நிமால் டி சில்வா சொன்னார். (ஒ-எ)

# நாளை வரை பதிவு செய்யலாம்

யாழ்ப்பாணம், செப் 18

திறந்த பல்கலைக்கழகத்தின் 1987/88ஆம்ஆண்டு தொழில் நுட்பவியல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்து பதிவு செய்யத் தவறியோர் நாளை 19 ஆம் திகதி வரை பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவு செய்யத் தவறுபவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# உதயன்

18 - 09 - 1987 வெள்ளிக்கிழமை







# புதிய மாநிலத்தில் முஸ்லிம்கள் பங்கு குறித்து இணக்கம்

## பதி- - அமிர் அறிவிப்பு

சென்னை, செப். 18

வடக்கு-கிழக்கு இணைந்த தமிழ் மாநிலத்தில் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகார, நிர்வாக, ஆட்சி உரிமை சம்பந்தமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் தலைமையிலான தூதுக் குழுவுக்கும் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் மாநிலத்தில் ஒற்றுமையையும், அமைதியையும் பேணும் விதத்தில் பல விடயங்களில் இணக்கம் காணப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

டாக்டர் பதியுதீன் தலைமையில் வந்த தூதுக் குழு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் இரண்டு நாட்களாகப் பேச்சுவார்த்தை நடத்தியது.

வடக்கு-கிழக்கு இணைந்த மாநிலம் நிரந்தரமாக இருக்க முஸ்லிம் மக்கள் ஒத்துழைப்பு நல்குவார்கள் என்றும்—

அங்கு தமிழர்-முஸ்லிம்கள் ஒற்றுமை பேணி அமைதியை நிலைநாட்ட முஸ்லிம்கள் உதவுவார்கள் என்றும் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தெரிவித்தார்.

புதிய மாநிலத்தில் முஸ்லிம் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பல விடயங்களில் உடன்பாடு காணப்பட்டதாகவும் —

தமிழ்-முஸ்லிம் மக்களை அமைதியையும், சமாதானத்தையும் கடைப்பிடிக்குமாறும்— இரு தூதுகோஷ்டிகள் சார்பில் கேட்டுக்கொள்வதாகவும் திரு. அமிர்தலிங்கம் சொன்னார். (அ)



செவ்வாயன்று "சைஸ்" நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் பின் யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், ஈரோஸ் இயக்கத்தின் முன்னணிப் பேச்சாளர் திரு. எட்வேட் ஆகிபேர் உரையாற்றிய போது எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்: ஜெயம்) (ஒ)

# எம் போராட்டம் பற்றி இந்தியா கரிசனை கொள்ளவில்லை

## யோகி கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப். 18

எமது போராட்டத்தின்நோக்கத்தை இந்திய அரசுக்கு உணர்த்துவதற்காகவும், நாங்கள் எமது இலட்சியத்தில் இருந்து விட்டுக்கொடுக்க மாட்டோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவுமே இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இன்றுவரை எமது போராட்டம் பற்றி இந்தியா கரிசனை கொள்ளவில்லை

விடுதலைப் புலிகளின் பேச்சாளரான திரு. யோகி நேற்று நல்லூரில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது.

இந்திய அரசைப் பொறுத்தவரையில் புலிகளை அழிக்க வேண்டும். தேசிய விடுதலை இயக்கம் என்று புலிகள் வளரக்கூடாது என்ற நோக்கத்தைக் கொண்டுள்ளனர்.

இதன் காரணமாகவே எம்மால் தடை செய்யப்பட்ட "டெலோ" "புளொட்" "ஈ பி. ஆர். எல். எவ்" இயக்கங்களுக்கு இந்தியா ஆயுத உதவி வழங்கி அவர்களை இங்கே கொண்டுவந்துள்ளது

நாம் ஆயுதம் ஏதும் இன்றி இப்போது இருக்கிறோம். அகிம்சை மூலமே எமது போராட்டம் வெளி உலகங்களுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-10)

## புலிகளை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை இரவு பி.பி.சி. தமிழோசையில் ஒலிபரப்பப்பட்ட செய்தி அறிக்கையும் இத்தகைய நடவடிக்கையின் ஒரு அம்சமேயாகும். எனவே இத்தகைய செய்திகளை நம்பவேண்டாம் என்றும், இத்திய சக்திகளை இனம் கண்டு கொள்ளுமாறும் தமிழ் மக்களை கேட்டுக்கொள்கின்றோம்— என்றும் அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (அ)

# அத்தியாவசிய தேவைகள் பாதிக்காதபடி நடக்கவும்

## பிரதித் தலைவர் மாத்தையா கேட்கிறார்

யாழ்ப்பாணம், செப். 18

பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பாதிக்காதபடி நடந்து கொள்ளுங்கள் பொது மக்களுக்கு கஷ்டமோ, இடைஞ்சலோ கொடுக்க வேண்டாம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா நேற்று மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வைத்தியசாலைகள் எதனையும் மூடவேண்டாம் போக்குவரத்துச் சேவைகளையும் நிறுத்தாதீர்கள். அவற்றை நடத்துங்கள். ஆனால் படமாளிகைகளையோ, வர்த்தக ஸ்தாபனங்களையோ திறக்காமல் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவியுங்கள்.

இவ்வாறு திரு மாத்தையா சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## போராட்டத்திற்கு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திவருகின்றனர்.

இப் போராட்டங்களுக்கு எமது பூரண ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஈழவர் ஒவ்வொருவரையும் பங்களிப்புச் செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

இத்தகைய போராட்டங்களின் காத்திரத் தன்மையை இலங்கை—இந்திய அரசுகள் புரிந்து கொள்ளவேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றோம்

தமிழ்பேசும் மக்களின் நலன்களை உள்ளடக்கிய முற்போக்கு எண்ணம் கொண்ட அனைத்துப் போராட்டங்களை எவர் முன்னெடுத்தாலும் எமது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் செலுத்தத் தயாராக உள்ளோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தமிழர் விரும்பிய அரசியல் சுயாட்சியை ஒப்பந்தம் வழங்கியுள்ளது

## ராஜீவ் கூறுகிறார்

புதுடில்லி, செப்-18

இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழர்விரும்பிய அரசியல் சுயாட்சியைப் பெற்றுக்கொடுத்து உள்ளது

பிரதமர் ராஜீவ் காந்தி முன்கண்டவாறு யு. என். ஐ. செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்

இலங்கைத் தமிழர் அமைப்புக்கள் தங்களுக்குள் சண்டையிடுவதை நிறுத்திக்கொண்டு மக்களின் நலன்களுக்காகப் பாடுபடவேண்டும்.

ஒப்பந்தம். சிங்கள இனத்தை விற்றுவிட்டதாக சிங்களவர்களில் ஒரு பகுதியினர் நினைக்கின்றனர்.

அது உண்மை அல்ல. வன்செயல்களில் இருந்து நாட்டை ஒப்பந்தம் மீட்டுக் கொடுத்து உள்ளது.

இப்படி பிரதமர்காந்தி பேட்டியில் மேலும்தெரிவித்தார். (இ-எ)

# திலீபனை இழந்தால்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத அவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்து கொண்டார்

கேள்வி:- எத்தனை வயதில் இயக்கத்தில் சேர்ந்தார்?

பதில்:- பதினெட்டு வயதில் இவர் இயக்கத்தில் சேர்ந்தார். படிப்பில் மிகவும் திறமைசாலி. இவர் பல்கலைக் கழகத்தில் அனுமதி கிடைத்தும் அதை வெறுத்து விடுதலை வேட்கையுடன் இயக்கத்தில் இணைந்தார்.

ஆறுமாதங்களுக்கு மேலாக வீட்டுக்கு வராமலும் இருந்திருக்கிறார்.

கேள்வி:- இவருடைய இந்தப் போராட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- தமிழீழம் என்பது அவனது இலட்சியம், அதனை அடைவதற்கே அவன் போராடுகிறான் போராட்டத்தை நிறுத்தச் சொல்லிக் கேட்டும் அவன் என்னுடன் கதைக்க வேண்டாம் என்கிறான்.

கேள்வி:- இந்தப் போராட்டத்தில் திலீபன் இறந்து விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்.

பதில்:- என்ன செய்ய முடியும் அவன் எதற்காகப் போராடினானோ அதனை அவனது சகோதரர்களாவது நிறைவேற்றி வைப்பார்கள். நிச்சயமாக அவன் இலட்சியம் நிறைவேறியே தீரும்.

கேள்வி:- உங்கள் தொழில் என்ன?

பதில்:- நான் ஆசிரியராகக் கடமையாற்றி தற்பொழுது இளைப்பாறியுள்ளேன். நானும் சற்று நோய்வாய்ப்பட்டவன் தான்

## திலீபனின்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசைக் கோரியே திரு. திலீபன் உண்ணாவிரதம் இருக்கிறார். ஆனால் இந்தியத் தரப்பு அதில் அக்கறை காட்டுவதாக இல்லை. உண்ணாவிரதத்தை முடிக்கச் செய்து திலீபனைக் காப்பாற்றுவதற்கான எந்த முயற்சியிலும் (நேற்றிரவு இச்செய்தி எழுதப்படும்வரை) ஈடுபட்டிருக்கவில்லை.

நேற்று மாலை இந்திய இராணுவப் பிரிகேடியர் பெர்னாண்டோ, மேஜர் சாயி ஆகிய இருவரும் திலீபனை பார்வையிட்டுச் சென்றனர். எவ்வித பேச்சுவார்த்தையோ உறுதிமொழிகளோ அளிக்கப்படவில்லை (அ-10)

## பொலீஸ்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டன.

சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று எரிக்கப்பட்டது.

பொது உடமைக்குச் சேதம் விளைவிப்போரைக் கண்டால் அந்த இடத்திலே சுடும்படி சென்னை பொலீஸ் ஆணையாளர் டபிள்யு தேவாரம் உத்தரவிட்டார். (இ-எ)

# போராளிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை தவறாது நிறைவேற்றுங்கள்

## அமைச்சுச்செயலாளர் பணிப்பு

திருகோணமலை, செப்.18

தமிழ்ப் போராளிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளைத் தவறாது நிறைவேற்றும்படி புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ திருமலை அதிகாரிகளைப் பணித்தார்.

வார இறுதியில் திருகோணமலைக் கச்சேரியில் நடந்த புனர்வாழ்வு மாநாட்டில் பேசிய போது திரு. ஒஸ்டின் பெர்னாண்டோ சொன்னதாவது;

நான் மூதூர்த் தொகுதிக்குச் சென்றபோது சேனையூரில் ஈரோஸ் போராளிகளைச் சந்தித்தேன் அவர்களில் ஒருவர் ஜெகன் என்பவர் எனக்குப் பூரண ஒத்துழைப்புத் தந்தார்.

சேனையூர் மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுகூடமொன்றை நிறுவுவதற்கு நிதி உதவி அளிப்பதாக அவர்களுக்கு வாக்குறுதி அளித்தேன்.

அதற்கு இன்று ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளேன்

இதுபோன்று திரியாய் சென்ற இடத்தில் விடுதலைப் புலிகள் போராளிகள் சிலரைச் சந்தித்தேன் அவர்களும் எனக்கு ஒத்துழைப்புத் தந்தனர்

அப்பகுதிக்குப் பஸ் சேவை ஏற்படுத்தித் தருவதாக நான் அவர்களுக்கு உறுதி கொடுத்திருக்கின்றேன்.

நான் அளித்த இவ் வாக்குறுதிகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்: காற்றில் பறக்கவிடக்கூடாது—

இப்படி திரு. ஒஸ்டின் பெர்னாண்டோ அரசு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார். (ஒ-எ-150)

# கோப்பாய்க்கு மீண்டும் மின்சாரம்

கோப்பாய், செப். 18

கோப்பாய் வடக்கில் கடந்த சில நாட்களாக தடைப்பட்டிருந்த மின்சாரம் கோப்பாய் உபஅபிவிருத்தி சபை அலுவலக மின்சார ஊழியர்களின் கடின உழைப்புக் காரணமாக புதன்கிழமை தொடக்கம் மீண்டும் வழங்கப்பட்டது

மின் ஊழியர்கள் காலை 7மணி தொடக்கம் மாலை 6 மணிவரை வெயிலையும் பாராது கடமையாற்றியதினால் இவ்வளவு விரைவாக மின்சாரம் பெற முடிந்தது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-ரி)

## மந்திகை--

(1ம் பக்கத் தொடர்ச்சி]

பாடசாலையிலும் அதனைச் சுற்றியுள்ள வீடுகளிலும் தோட்டங்களிலும் கடந்த ஒன்றரை மாதமாகஇவர்கள் முகாமிட்டிருந்தனர்.

இவர்களில் ஒரு பகுதியினர் தற்போது வவுனியா இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஏனையோர் அக்கணந்திடல் என்னும் கிராமத்திலுள்ள இந்திய இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர். (இ-118)

## 3 ஆம் கட்ட---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் தலைமை வகிக்கிறார். இலங்கை அரசுக் குழுவுக்கு ஜனாதிபதியின் செயலாளர் திரு. டபிள்யு எம். பி. பி. மெனிக்திவல தலைமை வகிக்கின்றார்.

இப் பேச்சுக்கள் நாளை சனிக்கிழமைவரை நடைபெறும். (அ-எ)

## புளொட் --

(1-ஆம் பக்க தொடர்ச்சி]

னுள் சென்று அவரை குறிவைத்து பயமுறுத்தி அழைத்துச் சென்றனர்.

அதேவேளை வீட்டில் இருந்த மற்றையோரையும் அந்த நபர்கள் பயமுறுத்தினர்.

கடத்திச் செல்லப்பட்ட துரைராஜா பற்றிய எதுவித தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. (ஒ-100)

## 24 மணித்தியால---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும்.

தவறு விட்ட சகல பொலீஸ் அதிகாரிகளும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் நிறுத்தப்படுவர்.

பிரதமர் பிரேமதாச, தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆகியவர்கள் இந்த ஒப்பந்தம் பற்றி எடுத்துள்ள நிலைப்பாட்டுக்காக, அவர்களை சுதந்திரக் கட்சி என்றும் மதிக்கும்

—இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசுகையில் சொன்னதாவது;

இந்திய அமைதிப் படையினர் என்ற பெயரில் இந்தியர்களும் இந்த நாட்டில் குடியமர்த்தப் படுவார்கள் என்று நான் அச்சப்படுகின்றேன்

ஏற்கனவே இந்தியர் [illegible] டனர் என்று வதந்திகள் கூறுகின்றன.

1971 கிளர்ச்சியை அடக்க அமெரிக்கத் துருப்புக்களை நான் கொண்டுவர முயற்சித்ததாக டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பொய்யான தகவல் ஒன்றைப் பரப்பி வருகின்றார்.

1982 ஜனாதிபதி தேர்தலில் திரு. ஜெயவர்த்தனாவின் வேண்டுகோளின் பேரில்தான் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா போட்டியிட்டார்.

கொப்பேகடுவையைத் தோற்கடித்து ஜெயவர்த்தனாவை வெல்ல வைப்பதே டாக்டர் டி சில்வாவின் நோக்கமாக இருந்தது.

இதை டாக்டர் டி சில்வா மறுப்பாரா?

— இப்படி திருமதி பண்டாரநாயக்கா [illegible] (இ-எ)

## உதயன் சஞ்சீவி

### சந்தா விவரம்

உள்நாடு

| காலம் | உதயன் ரூ ச | சஞ்சீவி ரூ ச | உதயனும் சஞ்சீவியும் ரூ ச |
|---|---|---|---|
| 1 வருடம் | 470.00 | 130.00 | 600.00 |
| 6 மாதம் | 235.00 | 65.00 | 300.00 |
| 3 மாதம் | 117.50 | 32.50 | 150.00 |

அஞ்சல் செலவு உட்பட

| காலம் | உதயன், சஞ்சீவி ரூ ச | அஞ்சல் செலவு ரூ ச | மொத்தம் ரூ ச |
|---|---|---|---|
| 1 வருடம் | 600.00 | 182.50 | 782-50 |
| 6 மாதம் | 300.00 | 91-25 | 391.25 |
| 3 மாதம் | 150.00 | 45.65 | 95.55 |


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 298/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 18 - 09 - 87ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 298/2 Navalar Road, Jaffna on 18 - 09 - 1987


## ஆதரவில் உதயன் நடத்தும் உலக கிண்ண கிரிக்கெட் புதிர்

பெயர்: ____________

முகவரி: ____________

____________

____________

இம் முறை உலக கிண்ணத்தை வெல்லப் போகும் நாடு எது? . . . . . . . . . .

இம் முறை இரண்டாவது இடம் எந்த நாட்டுக்கு கிடைக்கும்? . . . . . . . . . .

போட்டித் தொடரில் தனிப் போட்டியில் ஆகக் கூடிய ஓட்டங்களை எந்த நாடு எடுக்கும்? . . . . . . . . . .

போட்டித் தொடரில் தனிப் போட்டியில் ஆகக் குறைந்த ஓட்டங்களைப் பெறப் போகும் நாடு எது?

இந்தப் போட்டியில் இந்திய வீரர் சிறீகாந்த் சதம் பெறுவாரா? . . . . . . . . . .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org